# 6 பண்டிகைகளைக் கொண்டாடுவோம்

மனித வாழ்வின் பிரதான இலட்சியம் அறத்தின் வழியில் வாழ்ந்து, முத்தி அடைவதேயாகும். அந்த இலட்சியத்தை அடைவதற்குரிய வழிகளில் ஒன்றாக பண்டிகைகளும் விரதங்களும் அமைகின்றன. முதலில் பண்டிகை என்பதன் பொருளை நோக்குவோம். வருடத்தில் குறிப்பிட்ட நாட்களில் சமய ஈடுபாட்டுடனும், விருந்துகளுடனும் கொண்டாடப்படும் சடங்கு **பண்டிகை** என வழங்கப்படும். நாம் கொண்டாடும் பண்டிகைகள் ஒவ்வொன்றும் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டவை. அவற்றின் பயன்களையும் தத்துவங்களையும் புரிந்து கொண்டாடும் போது அவற்றின் பண்பும் பயனும் பல. இப்பாடத்தில் தைப்பொங்கல், (சித்திரை) வருடப்பிறப்பு, தீபாவளி என்னும் பண்டிகைகளைக் கற்று அவற்றை முறைப்படி கொண்டாடுவோம்.

## 1. தைப்பொங்கல்

நாம் கொண்டாடும் பண்டிகைகளுள் தைப்பொங்கலும் ஒன்றாகும். தை மாதப்பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் முதலானவற்றைப் படைத்து வழிபடும் பண்டிகை தைப்பொங்கலாகும்.

தைப்பொங்கல் தினம், சோதிட அடிப்படையில் சிறப்புப் பெறுகின்றது. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலம் உத்தராயணம் (உத்தரம் + அயனம்) எனப்படும். அவ் உத்தராயணத்தின் தொடக்க நாள், தை மாதத்தின் முதல் நாள் ஆகும். அதனை, சூரியன் தனு இராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்லும் நாள் என சோதிடவியல் கூறும். தை முதல் நாளை '**மகர சங்கிராந்தி**' என்று அழைப்பர். சைவர்கள் அந்நாளை '**தைப்பொங்கல் தினம்**' எனவும், '**தைத்திருநாள்**' எனவும் '**உழவர் திருநாள்**' எனவும் போற்றி, மரபுகளுக்கமையக் கொண்டாடுவர். தைப்பொங்கல் பண்டிகை தமிழகத்தின் பெரும்பாலான பிரதேசங்களிலும், இலங்கையிலும், உலகத் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் கொண்டாடப்படுகின்றது.

உணவு உற்பத்திக்குத் தேவையான மழை, வெப்பம், வெளிச்சம் என்பவற்றை வழங்குபவன் சூரியன். அதனால் நன்றி மறவாது, சைவர்கள் தை மாதப் பிறப்பன்று புதிய அறுவடையில் கிடைத்த நெல்லரிசியைக் கொண்டு பொங்கல் பொங்கிச் சூரியனுக்குப் படைத்து வழிபடுவர். அதனால் தைப்பொங்கலைச் '**சூரியப் பொங்கல்**' எனவும் வழங்குவர். தைப்பொங்கல் நாளில், அதிகாலையில் எழுந்து, வீட்டைச் சுத்தம் செய்வர். பின்னர் நீராடி, புத்தாடை அல்லது தூய ஆடை அணிந்து முற்றத்தை மெழுகிக் கோலமிடுவர். அதன் மத்தியில் தலைவாழைஇலையில் நிறைகுடமும் குத்துவிளக்கும் வைப்பர். அருகில் மஞ்சள் அல்லது சாணத்தில் பிள்ளையார் பிடித்து, அறுகம்புல்லைக் குத்தி பிள்ளையாராக வைப்பர்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

அவற்றுடன் வெற்றிலை, பாக்கு என்பவற்றையும் கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி முதலான பூசைக்குரிய வாசனைப் பொருட்களையும், கழுவிச் சுத்தப்படுத்திய வாழைப்பழம், மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம், மாதுளம்பழம் முதலான கனிகளையும் கரும்பு, மஞ்சள் என்பவற்றையும் வைப்பர். பொங்கலுக்குத் தேவையான பச்சையரிசி, பால், சர்க்கரை, பாசிப்பயறு, நெய், திராட்சைப் பழவற்றல், முந்திரியம் பருப்பு முதலானவற்றையும் எடுத்து வைப்பர்.

பொங்கல் இடம் பெறும் இடத்தினை மாவிலை, தோரணம் கட்டி அலங்கரிப்பர். புதுப் பொங்கற் பானையைக் கழுவி, திருநீற்றால் குறியிட்டு, அப்பானையின் கழுத்தில் நூற்கயிறு அல்லது ஈரமான வாழைநார் கட்டுவர். அதனை மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலை, பூ, பூமாலை முதலியவற்றைக் கொண்டு அலங்கரிப்பர். அதன் பின் பானையைப் புத்தடுப்பில் ஏற்றுவர். பொங்கற் பானையில் உள்ள பால் கொதித்து, பொங்கி வரும்போது 'பொங்கலோ பொங்கல்' என ஒலித்து கடவுளைப் பிரார்த்தித்து இரு கைகளாலும், கழுவிய புத்தரிசியை எடுத்து பானையை மூன்றுதரம் வலம் இடமாக சுற்றிய பின் பானையுள் இடுவர். அவற்றுடன் ஏனைய பொங்கற் பொருட்களையும் இட்டு, இனிய பொங்கலைப் பொங்குவர்.



சூரியன் உதயமாகும்போது பொங்கிய பொங்கலை இல்லத்தலைவன் தலைவாழையிலையிற் படைப்பார். அவற்றுடன் பலவகைக் கனிகளையும், கரும்பு முதலானவற்றையும் வைத்து, குடும்பத்தாருடன் வழிபாடு செய்வர். பஞ்சபுராணம் ஓதி, தூபதீபம் காட்டி, பிள்ளையார் முதலான தெய்வங்களையும் சூரியனையும் வழிபட்டு தண்ணீர் தெளித்து படையணக் கலைப்பர். பின்னர் பொங்கலைப் பகிர்ந்துண்டு மகிழ்வர். தைப்பொங்கலுக்கு முதல் நாள் போகிப்பண்டிகை நடைபெறும். அதனைத் தமிழ் நாட்டில் கொண்டாடுவர். ஈழத்துச் சைவர்கள் இவ்விழாவைப் பேணுவது குறைவு. வீட்டிலுள்ள தேவையற்ற கழிவுகளை அகற்றி, வீட்டையும் சூழலையும் சுத்தம் செய்வர். வெள்ளை அல்லது வர்ணம் பூசுவர். வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்வர்.

சூரியனுக்கு நன்றி பாராட்டும் மக்கள் தமக்கும் தம் உழவுத் தொழிலுக்கும் உறுதுணையான பசுக்களையும், எருதுகளையும் மறப்பதில்லை. அதனால், அவற்றுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக, தைப்பொங்கலுக்கு அடுத்த நாளில் பட்டிப் பொங்கலைக் கொண்டாடுவர். அதனை **மாட்டுப் பொங்கல்** எனவும் அழைப்பர். மாட்டுப் பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்பு சீவி, வர்ணம் பூசி, மஞ்சள் குங்குமத் திலகம் வைத்து, பூ மாலை அணிவித்து,



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

குஞ்சமும் சலங்கையும் கட்டுவர். மாட்டுப்பட்டிகளின் முன்பாக நிலத்தைப் பெருக்கி, நீர் தெளித்து கோலம் போடுவர். மாடுகளுக்குப் படைப்பர். பொங்கலை மாடுகளுக்கு ஊட்டி விடுவதுடன், தாமும் உண்பர். அவற்றுக்கு நாவூறு கழிப்பர்.

தைப்பொங்கல் பண்டிகையை உறவினருடன் சேர்ந்து கொண்டாடுவதன் மூலமும், உறவினர், அயலவர்களுடன் உணவைப் பகிர்ந்துண்ணல் அவர்களது வீடுகளுக்குச் செல்லல் என்பவற்றின் மூலமும் பொது வைபவங்களில் கலந்து கொள்வதன் மூலமும் அன்பு, கருணை, நன்றியுணர்வு, மன்னித்தல், சகோதரத்துவம், கடவுள் வழிபாடு முதலான பண்பாட்டுக் கூறுகள் வளர்க்கப்படுகின்றன. உறவுகள் சேர்வதனால் பகைமை மன்னிக்கப்பட்டு வலுப்பெறுகின்றது . மகிழ்ச்சியும் அதிகரிக்கின்றது. புத்தாடை அணிதல், வாழ்த்துக் கூறுதல், பகிர்ந்துண்ணல், தான தருமம் செய்தல் முதலானவற்றால் மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்படுகின்றது. ‘‘தை பிறந்தால் வழி பிறக்கும்’’ என்பதற்கிணங்க வாழ்வில் நம்பிக்கையை வலுப்படுத்தி, மரபுகளுக்கு மதிப்பளித்து பொங்கலைக் கொண்டாடுவோம்.

## 2. புத்தாண்டு

சைவ சமயத்தவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் சித்திரைப் புத்தாண்டும் ஒன்றாகும். இப்பண்டிகையை நாம் வருடந்தோறும் கொண்டாடி வருகின்றோம். சித்திரை முதலாம் நாள் மத்திய கோட்டிலிருந்து வடதிசையை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தைக் கடந்து செல்லும் தினமுமாகும். எமது தமிழ் வருடங்கள் **பிரபவ** தொடக்கம் **பரிதாபி** வரை அறுபது (60) ஆகும். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முதலாம் திகதி தொடக்கம் பங்குனி முப்பத்தொன்றாம் திகதி வரை கொண்ட காலப்பிரிவாகும். பிறக்கின்ற ஒவ்வோர் ஆண்டையும் அதற்குரிய பெயரால் அழைத்து, ஆண்டின் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுவது சைவ மக்களின் வழக்கம். புத்தாண்டுக்கு முன்னுள்ள நாட்களில் வீடு, கோயில் என்பவற்றைக் கழுவுவர். அவற்றுக்கு வெள்ளையடித்தல், நிறம் பூசுதல் என்பவற்றில் ஈடுபடுவர். புத்தாண்டு பின்வரும் அடிப்படையில் சைவர்களால் கொண்டாடப்படும்.

### (அ) மருத்துநீர்

புத்தாண்டு தினத்தில் வரும் விஷுபுண்ணிய காலத்தில் சைவ சமயத்தவர்கள் தமது பாவங்கள், தோஷங்கள் நீங்க வேண்டி மருத்துநீரை தலையில் தேய்த்து நீராடுவர். **மருத்துநீர்** என்பது பலவகையான மலர்கள், இலைகள், தழைகள், அறுகு, மஞ்சள், மிளகு, திப்பிலி, பால் முதலியவற்றை சேர்த்து அவிக்கின்ற நீராகும். (பஞ்சாங்கத்தில் அந்தந்த ஆண்டிற்கு மருத்து நீருக்குச் சேர்க்க வேண்டியவை குறிப்பிடப்பட்டிருக்கும்). மருத்து நீர் ஆலயங்களிலோ, அர்ச்சகர் வீடுகளிலோ தயாரிக்கப்படும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## (ஆ) நிறைகுடம், மடை வைத்தல்

புத்தாண்டுப் பொங்கலுக்கு முன்பாக மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடை அணிவர். சுவாமி அறையில் தலைவாழை இலையில் அரிசி அல்லது நெல் பரவி நிறைகுடம் வைப்பர். அதன் இரு பக்கத்திலும் குத்துவிளக்கை ஏற்றுவர். நிறைகுடத்தின் முன் மஞ்சளில் அல்லது சாணத்தில் அறுகம்புல் குத்தி பிள்ளையார் வைப்பர். அவற்றுடன் வெற்றிலை, பாக்கு, பூக்கள் என்பவற்றையும் கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி முதலான பூசைக்குரிய வாசனைப் பொருட்களையும் கழுவிச் சுத்தப்படுத்திய வாழைப்பழம், மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம், மாதுளம்பழம் முதலான கனிகளையும் வைப்பர்.

## (இ) அலங்காரத் தோரணம் கட்டுதலும் பொங்கலும்

புத்தாண்டு பிறப்பதற்கு முன்பாக பொங்கல் பொங்கும் இடத்தைக் கூட்டிச் சுத்தம் செய்வர். வீட்டு முற்றத்தில் மாவிலை, தோரணம் கட்டி அலங்கரிப்பர். முற்றத்தை மெழுகிக் கோலமிடுவர். பொங்கலுக்குத் தேவையான பச்சை அரிசி, பால், சர்க்கரை, பாசிப்பயறு, நெய், திராட்சைபழ வற்றல், முந்திரியம் பருப்பு முதலானவற்றையும் எடுத்துவைப்பர். மங்களப் பொருட்களையும் எடுத்து வைப்பர். மோதகம், கொழுக்கட்டை முதலான பட்சணங்களைப் பெண்கள் தயாரிப்பதில் ஈடுபடுவர்.



### பொங்கல்

வீடுகளில் புத்தாண்டுப் பொங்கல், சூரியோதயத்தை ஒட்டியே நடைபெறும். புத்தாண்டு பிறந்ததும் குடும்பத் தலைவன் பொங்கலைப் பொங்குவார். முதலில் புதுப் பொங்கற் பானையைக் கழுவி, திருநீற்றால் குறியிட்டு, பானையின் கழுத்தில் நூற்கயிறு அல்லது ஈரமான வாழைநார் கட்டுவர். அதனை மாவிலை, பூ, பூமாலை முதலியவற்றால் அலங்கரிப்பர். அதன் பின் பானையைப் புத்தடுப்பில் ஏற்றுவர். பால் கொதித்து பொங்கி வர, இரு கைகளாலும், கழுவிய அரிசியை எடுத்து, பொங்கல் பானையை மூன்று தரம் வலம் இடமாகச் சுற்றி, கடவுளைப் பிரார்த்தித்து, பானையுள் இடுவர். அரிசி வேகும் போது பொங்கற் பொருட்களையும் இட்டு, இனிய பொங்கலைப் பொங்குவர்.

பொங்கல் பொங்கி முடிந்ததும் குடும்பத் தலைவர் கிழக்கு முகமாக நின்று பொங்கற் பானையை இறக்கி வைப்பார். பின்னர், பொங்கலைத்



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

தலைவாழை இலையில் படைப்பார். அவற்றுடன் பலவகைக் கனிகளையும் மோதகம், கொழுக்கட்டை முதலானவற்றையும் வைத்து, எல்லோரும் சேர்ந்து பிள்ளையார் முதலான தெய்வங்களையும் சூரியனையும் பஞ்சபுராணம் ஓதி, தூபதீபம் காட்டி வழிபடுவர். பின்னர் பொங்கலைப் பகிர்ந்துண்டு மகிழ்வர்.

### (ஈ) ஆலய வழிபாடு

வீட்டில் புதுவருடப் பிறப்பைக் கொண்டாடிய மக்கள் பூசைப் பொருட்களுடன் ஆலயத்திற்குச் சென்று, இஷ்ட தெய்வ வழிபாட்டை மேற்கொள்வர்.

### (உ) ஆசி பெறுதல்

மூத்தோரதும் பெரியோரதும் ஆசீர்வாதத்தால் நாம் சந்தோசமாக வாழலாம், அதனால் புத்தாண்டுத் தினத்தில் வயதில் மூத்தோரை வணங்கி, அவர்களது ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

### (ஊ) கைவிசேடம்

பஞ்சாங்கம் குறிப்பிடும் சுப தின, சுப நேரத்தில் கைவிசேடம் வழங்குவர். குடும்பத்திலுள்ள மூத்தோர், வெற்றிலையில் நெல், மஞ்சள், பாக்கு, பூ, பணம் என்பன வைத்து, வீட்டிலுள்ளவர்களுக்கும், ஏனையோருக்கும் கொடுப்பதை **கைவிசேடம் வழங்குதல்** என்பர். சுபநேரத்தில் கைவிசேடம் பெறுவதன் மூலம் அவ்வாண்டில் பணப்பெருக்கம் அதிகரிக்கும் என்பது சைவ மக்களின் நம்பிக்கையாகும்.



### (எ) சுபநேரச் செயற்பாடுகள்

புத்தாண்டில் வரும் சுப நேரத்தில் ஏர்மங்கலம், புதிரெடுத்தல், விதைத்தல், வித்தியாரம்பம் முதலான கருமங்களைத் தொடங்கும் வழக்கம் சைவ மக்களிடம் உள்ளது. புத்தாண்டுத் தினத்தில், பஞ்சாங்கத்தில் ஆண்டுப் பயனை வாசிப்பதும், வாசிக்க கேட்பதும், சுபதின, சுபநேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்வதும் இப்பண்டிகையின் வழக்காறுகள் ஆகும்.

### (ஏ) விளையாட்டு

புதுவருடக் கொண்டாட்டம் தொடர்ந்து சில நாட்களுக்கு நடைபெறும். ஊஞ்சல், போர்த்தேங்காய் அடித்தலநிகழ்வுகளும் மக்களை மகிழ்ச்சிப்படுத்துகின்றன.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## (ஐ) சமூக ஒற்றுமை

மக்கள் அயலவர், உறவினர் ஆகியோருடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவதன் மூலமும், அவர்களுடன் உணவைப் பகிர்ந்துண்ணல், அவர்களது வீடுகளுக்குச் செல்லல் என்பவற்றின் மூலமும் பொது வைபவங்களில் கலந்து கொள்வதன் மூலமும் அன்பு, கருணை, நன்றியுணர்வு, மன்னிப்பு, சகோதரத்துவம், கடவுள் வழிபாடு முதலான பண்பாட்டுக் கூறுகள் வளர்க்கப்படுகின்றன. உறவுகள் சேர்வதனால் பகைமை மன்னிக்கப்பட்டு, உறவுகள் வலுப்பெறுகின்றன. மகிழ்ச்சியும் அதிகரிக்கின்றது. புத்தாடை அணிதல், வாழ்த்துக் கூறுதல், பகிர்ந்துண்ணல், தான தருமம் செய்தல் முதலானவற்றால் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படுகின்றது.

எமது நாட்டில் சைவ சமயத்தவர்களைப் போன்று பௌத்த சமயத்தவர்களும் புத்தாண்டு தினத்தைச் சம்பிரதாயபூர்வமாகக் கொண்டாடி வருகின்றனர். எமக்கிடையிலான அன்னியோன்னியமான உறவுகளையும், ஐக்கியத்தையும், தேசிய ஒற்றுமையையும் வளர்ப்பதில் புத்தாண்டு நிகழ்வுகள் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. சைவ சமயத்தவர்கள் பிறரையும், பிற சமயத்தவர்களையும் மதிப்பதில் பேருவகை கொள்வர்.

# 3. தீபாவளி

நாம் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. தீபங்களை வரிசையாக ஏற்றுதல் என்பது **தீபாவளி** என்ற சொல்லின் பொருளாகும். இது ஒவ்வொரு ஆண்டும் துலாமாதம் எனப்படும் ஐப்பசி மாதத்தின் தேய்பிறை (கிருஷ்ண பட்ச) சதுர்த்தசி (திதி) தினத்தில் அதிகாலையில் பிறக்கின்றது. இத்தினத்திலே தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிது. தீபாவளிப் பண்டிகை இலங்கையிலுள்ள சைவசமயத்தவர்களாலும், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், நேபாளம் முதலான நாடுகளில் வாழும் சைவ, வைணவ சமயத்தவர்களாலும் கொண்டாடப்படுகின்றது.

தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய கதைகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றினை இங்கு பார்ப்போம். முன்னொரு காலத்தில் நரகாசுரன் என்ற அசுரன் இருந்தான். அவன் பிரம்மதேவரிடம் வரங்கள் பல பெற்றான். அதனால், அவன் ''நானே பெரியவன்'' என்று அகங்காரம் கொண்டிருந்தான். தேவர்களுக்கும், மக்களுக்கும் பல வித கொடுமைகளை இழைத்தான். மக்கள் இறைவனிடம் முறையிட்டனர். அவ்வேளை காத்தற் கடவுளாகிய விஷ்ணு, துவாரகா புரியில் கிருஷ்ண பகவானாக அவதரித்திருந்தார்.

''நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் காலந்தோறும் நான் தோன்றுகின்றேன்'' என்று கிருஷ்ண பகவான் பகவத்கீதையில் அருளியபடி கிருஷ்ண அவதாரம் தோன்றியிருந்தது. கிருஷ்ண பகவான் அசுரனைக் கொல்லத் திருவுளம் கொண்டார். பகவானின் திருக்கரத்தால் இறக்கும் தறுவாயில், நரகாசுரன் உண்மையை உணர்ந்தான். இறப்பதற்கு முன் ஒரு வரத்தை பகவானிடம் வேண்டினான்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

‘‘சுவாமி, நான் இறக்கும் இத்தினத்திலே உன்னை அர்ச்சித்து வழிபடுவோருக்குக் கருணை புரிய வேண்டும்’’ என்று கேட்டான். அந்த வரம் வழங்கப்பட்டது. அத்தினமே தீபாவளிப் பெருநாளாக அமைந்தது.



அசுரன் இறந்த போது இருள் நீங்கியது. தேவர் முதலானோர் தாம் இழந்தவற்றை மீண்டும் பெற்றுக் களிப்படைந்தனர். சிறைப்பட்டிருந்து விடுதலைப் பெற்ற மக்களும் பிறரும் மகிழ்வுடன் விளக்குகள் ஏற்றி வழிபாடு செய்தனர். எங்கும் பிரகாசம் பொங்கிப் பொலிந்தது. அதனை நினைவு கூரும் முகமாக ஆண்டு தோறும் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுகின்றோம்.

தீபாவளியுடன் தொடர்புடைய இக்கதை தத்துவ உண்மைகள் பொதிந்தது. வாழும் காலத்தில் பிறருக்குப் பயன்படும்படி வாழ்வதும், தவறுக்கு வருந்துவதும், தவறை ஒப்புக் கொள்வதும் நம்மை முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்லும் நல்ல பழக்கங்கள் ஆகும். ‘‘சத்தியத்தின் துணையுடன் தீமையை வெல்லலாம்’’ என்பது தீபாவளி பற்றிய புராணக் கதை புகட்டும் முக்கிய கருத்தாகும்.

தீபாவளி தினத்தில் அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடுவர், அந்த எண்ணெயில் இலக்குமி வசிப்பதாகவும் நீராடும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறும். அன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர், கங்கையில் நீராடிய பலன் பெறுவர். நீராடிய பின் புதிய ஆடை அணிந்து, வீட்டிலும் கோயில்களிலும் இறைவனை வணங்கிய பின், உற்றார் உறவினருடன் பகிர்ந்துண்டு மகிழ்வதே தீபாவளிப் பண்டிகை ஆகும். அன்று கோயில்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றுவதும், சிறுவர் சிறுமியர் மத்தாப்பு, வெடி கொழுத்துவதும் இடம்பெறும்.

தீபாவளிப் பண்டிகை பல அறப்பண்புகளை எம்மிடையே வளர்க்கின்றது. இருப்பவர், இல்லாதவர் என்ற இரு பிரிவினரிடையே ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, ஈய்ந்துவக்கும் இன்பம் தரும் பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை விளங்குகின்றது. இருப்பவர்கள் உணவுப் பண்டங்களையும், புத்தாடைகளையும் ஏழைகளுக்கு வழங்குவர். அதனால் அவர்களும் அன்றைய நாளை மகிழ்வாகக் கொண்டாடுகின்றனர்.

மேலே கற்ற பண்டிகைகளில் இடம் பெறும் விருந்தோம்பல், புத்தாடை தரித்தல், சுற்றம் தழுவல், ஆடல் பாடல் முதலானவை பண்டிகைகளை உயிர்த்துடிப்புள்ளவையாக மாற்றிவிடுகின்றன. எனினும், சமய விதிமுறைகளுக்கு அமைய கடவுள் வழிபாட்டுக்கு முதன்மையளித்து, புனிதம் பேணி மகிழ்ச்சிப் பொங்கப் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச்சுருக்கம்

- வருடத்தில் குறிப்பிட்ட நாட்களில் சமய ஈடுபாட்டுடனும், விருந்துகளுடனும் கொண்டாடப்படும் சடங்கு பண்டிகை ஆகும்.
- தை மாதத்தின் முதல் நாளில் சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும் பண்டிகை தைப்பொங்கல் பண்டிகை ஆகும்.
- தைப்பொங்கலுக்கு அடுத்த நாளில் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவர்.
- சித்திரை மாதம் முதலாம் நாள் சித்திரை வருடப்பிறப்புக் கொண்டாடப்படுகிறது.
- சித்திரை வருடபிறப்பில் மருத்துநீர் வைத்தல், கைவிசேடம் பெறுதல் என்பன முதன்மை பெறுகின்றன.
- தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தசி திதியில் கொண்டாடப்படுகின்றது.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பண்டிகை என்றால் என்ன?
2. நீங்கள் கொண்டாடும் பண்டிகைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. தீபாவளி என்றால் என்ன?
4. தீபாவளி, தைப்பொங்கல், புத்தாண்டு எனும் பண்டிகைகள் கொண்டாடும் காலங்களைக் குறிப்பிடுக.
5. தீபாவளிப் பண்டிகையின் மூலம் வளர்க்கப்படும் அறப்பண்புகளை பட்டியற் படுத்துக
6. நரகாசுரன் கதையின் மூலம் நீங்கள் கற்ற படிப்பினைகளை எழுதுக.
7. தைப்பொங்கல் கொண்டாடப்படும் நோக்கத்தைத் தருக.
8. மாட்டுப்பொங்கல் என்றால் என்ன?

## ௐ செயற்பாடுகள்

- நீங்கள் கற்ற பண்டிகைகளைக் கொண்டாடிய முறைகளைக் கட்டுரையாக எழுதி, ஆசிரியரிடம் ஒப்படைக்குக.
- இந்தப் புதுவருடத்தில் மருத்துநீரில் சேர்க்கும் பொருள்களைப் பட்டியற்படுத்துக.
- தமிழ் வருடங்களில் ஐந்தின் பெயரை எழுதுக.
- ‘தைப்பொங்கல் பண்டிகையும் நற்பண்புகளும்’ என்ற தலைப்பில் ஐந்து நிமிடப் பேச்சொன்றை நிகழ்த்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக